# Worksheet 3 for Academic year (2025 - 2026)

**Grade : 8**

**Subject: Tamil ( தமிழ் )**

**Date _______________**

I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) செவ்விந்தியர்கள் நிலத்தைத் ………………….. மதிக்கின்ற னர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
2) இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………
அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை
3) பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ………………..
அ) பால் ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும் ஈ) பாஊறும்
4) மாடு வயலில் புல்லை மேய்ந்தது. – இத்தொடரிலுள்ள வினைமுற்று ………………..
அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது
5) பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ………………….
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
6) பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் …………
அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

II) நிரப்புக :

1. அமெக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் ………………………. பழங்குடியினர்.
2. பூஜேசவுண்ட்/சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவராக விளங்கியவர் ……………………
3. சியாட்டல் ……………………….. காக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.
4. சியாட்டல் அமெரிக்கக் ……………………… கடிதம் எழுதினார்.
5. விலை கொடுத்து வாங்க முடியாதவை என சியாட்டல் கூறியவை ……………………….

III) தொடரில் அமைத்து எழுதுக:

1) வேடிக்கை
2) உடன்பிறந்தார்

IV) கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.

1. முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ……………………..
2. கடமையைச் செய் ………………………….
3. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! ………………………
4. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? …………………..

V) மொழிபெயர்ப்பு:

1. Tribes
2. Plain
3. Valley
4. Thicket
5. Ridge
6. Locust
7. Leopard
8. Bud

VI) குறுவினா:

1) விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
2) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

3) எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?
4) சுகுவாமிஷ் பழங்குடியினர் பூமியையும் வானத்தையும் எவ்வாறு கருதுகின்றனர்?
5) வினைமுற்று என்றால் என்ன?
6) தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
7) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
8) ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

VII) சிறுவினா:

1) நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
2) எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?